# வாக்கியம் அமைத்தல்

ம வரிசை சொற்கள்

1. மாத்திரை

அப்பா மாத்திரை வாங்க கடைக்கு சென்றார்.

2. மார்கழி

மார்கழி மாதம் அனைவரும் வண்ணக் கோலங்கள் போடுவர்.

3. மார்பு

தாய் குழந்தையை மார்போடு அரவணைத்தாள்.

4. மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டம் விவசாயத்திற்கு பேர் போனது.

5. மாலை

மாலை நேரம் குழந்தைகள் விளையாடினார்கள்.

Notebook Writer
Notebook Writer
Notebook Writer

6. மாங்காய்

அம்மா மாங்காய் ஊறுகாய் செய்தாள்.

7. மாணவர்கள்

மாணவர்கள் அனைவரும் சுற்றுலா சென்றனர்.

8. மாணவி

மாநில அளவில் முதல் மதிப்பெண் திருச்சியை சேர்ந்த மாணவி பெற்றாள்.

9. மாணவன்

தேசிய அளவில் ஓட்ட பந்தயத்தில் தமிழ்நாட்டு மாணவன் முதலிடம் வென்றான்.

10. மாநிலம்

இன்று மாநிலம் முழுவதும் விடுமுறை.

11. மாவீரர்

நம் நாட்டு இராணுவ வீரர்கள் அனைவரும் மாவீரர்கள்.

Notebook writer
Notebook writer
Notebook writer

12. மாமிசம்

ஆதிவாசிகள் மாமிசம் அதிகம் உண்டனர்.

13. மின்னஞ்சல்

பள்ளி விடுமுறை என்று மின்னஞ்சல் மூலம் செய்தி அனுப்பினர்.

14. மின்சாரம்

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

15. மிதிவண்டி

நான் மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்வேன்.

16. மிளகு

கேரளாவில் மிளகு அதிகம் விளையும்.

17. மின்விளக்கு

தெருதோறும் மின்விளக்கு போடப்பட்டன .

Notebook Writer

18. மின்மினிப்பூச்சி

கண்ணன் பத்து மின்மினிப்பூச்சிகளை பிடித்தான்.

19. மின்விசிறி

பாட்டி மின்விசிறி வேகத்தை குறைக்க சொன்னார்.

20. மின்னல்

பெரிய ஆலமரத்தை மின்னல் தாக்கியது.

21. மிருகம்

மிருகத்தை கூண்டில் அடைத்தனர்.

22. மீன்

குமார் கண்ணாடி தொட்டியில் மீன் வளர்த்தான்.

23. மீது

பசு கன்று மீது அன்பு காட்டியது.